

# பயணம்

இதழ்- 7 ஜூலை-2017

*ஸ்ரீ அண்ணன் சுவாமிகளிடம் சமர்ப்பிக்கப்படுகிறது--இறை நாட்டம் கொண்ட அன்பர்களுக்காக.....

www.sriannanswamigal.com

www.sriannanswamigalmobile.in

இறைவனை நாடுபவர்கள்,பெரும்பாலும் தனது ஆரம்ப நாட்களில் பல குழப்பங்களுக்கு ஆளாகின்றனர். தூசி படிந்த அறையை சுத்தம் செய்ய முற்படும்போது பெரும் புழுதி கிளம்பி முன்பிருந்த வெளிச்சத்தையும் மறைப்பது போல ,ஆத்ம சாதகனுக்கு தற்காலிக இருளும், மயக்கமும் ஏற்படுகிறது. அப்போதெல்லாம் அவனுக்கு துணை, குருவின் அரவணைப்பு மட்டுமே. குருவருளும், இறையருளும் யாருக்கு கிடைக்கின்றதோ..அவர் பேறு பெற்றவர். அவ்வாறு அருள் கிடைக்க ஒரு சாதகன் தன்னை தயார் படுத்திக்கொள்வது மிகவும் அவசியம். இறைவனே எல்லாம் செய்வான் எனக்கு, என தமோ குண தாக்கத்தில் ஒருவன் உறங்கிகொண்டிருந்தால்,மேலும் மயக்கத்தில் ஆழ்ந்து போவான். எனவே தேடலின் தீவிரம், சரணாகதியின் அவசியம்,இறைவன் நம்மை ஆட்கொள்ளும் விதம்,குருவின் அவசியம், குருவின் மகிமை, குருவின் அருள் இவற்றை பற்றி நன்றாக உணர்ந்து தெளிந்த மஹாத்மாக்களின் அனுபவங்களை இங்கு நாம் தருகிறோம்.இவை ஆத்ம சாதகர்களுக்கு, இறைஞான தரிசனம் என்ற பயணத்தில் ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

-இணைய நிர்வாகிகள்

# உள்ளே


| படைப்புக்கள் | பக்கம் எண் |
| --- | --- |
| கர்ம யோகம் (தொடர்ச்சி) | 04-09 |
| சுவாமி சிவானந்தர் பஜன் | 10-13 |

# கர்ம யோகம் (தொடர்ச்சி)



ஆச்சார்யா வினோபா

(ஆச்சார்யா வினோபா அவர்கள் ஒரு மாபெரும் கர்மயோகி ஆவார்கள். இந்து, இஸ்லாம்,கிருத்துவ மத தத்துவங்களை நன்கு படித்து தெளிந்தவர்.பன்மொழி புலமை பெற்றவர்.1932 ஆம் ஆண்டு இவர் ஒத்துழையாமை இயக்க சொர்பொழிவின் போது கைது செய்யப்பட்டு தூலே சிறையில் 6 மாதம் அடைக்கப்பட்டார். அங்கு இருந்தவர்கள் வினோபாவிடம் கீதை சொற்பொழிவை வழங்கும் படி கேட்க, ஆச்சார்யாவும் ஒவ்வொரு ஞாயிறும்

அனைவரும் கூடியிருக்க சிறையில் கீதை சொற்பொழிவை வழ்ங்கினார். 18 ஞாயிறுகளில் 18 அத்தியாயத்தை பற்றி தன் அனுபவ அறிவினால் நுட்பமாக பேசினார். அது பிற்காலத்தில் வினோபாவின் பார்வைக்கு பின் புத்தகமாக வெளியிடப்பட்டது.அந்த கீதை பேருபதேசம்"" என்ற நூலை தழுவிய தமிழாக்கம் இங்கு தரப்பட்டுள்ளது.---- இணைய நிர்வாகிகள் )

இவ்வாறு கர்ம பலன் மேல் ஆசையின்றி செய்யும் கர்மங்கள் கர்மயோகமாக ஆகிறது. ஆனால் ஆசையற்று கர்மத்தை செய்ய ஒருவன் அவனது சுதர்மத்தை (சுதர்மம் என்பது ஒருவனுக்கு தனது இயல்புக்கு, தனது சுபாவத்துக்கு ஒத்த தனது அறிவு, ஆற்றலுக்கு ஏற்ற, தர்மத்திற்கு உட்பட்ட ,சிரமமின்றி தான் செய்யும் மற்றும் தனக்கு அமைந்த கர்மம் ஆகும்.) மட்டும் செய்யவேண்டும். தனது சுதர்மத்தை விட்டு பிறரின் தர்மத்தை ஒருவன் செய்வானேயானால் அவனுக்கு கர்மபலன்மேல் உள்ள அபிமானம்,ஆசை இவற்றை விட்டொழிக்க முடியாது. ஆசையற்ற மனோபாவம் வருவதும் சிரமம். சிறு,சிறு குறைகள் இருந்தாலும் சுதர்மத்தை செய்துகொண்டே இருப்பது ஆசையற்ற நிலையை அடைய நாம் எடுக்கும் முதல் படியாகும்.

ஓர் விளக்கை ஏற்ற எண்ணெய்,திரி இவை மட்டும் போதாது.தீ சுவாலையும் வேண்டும். இருளை போக்க தீ சுவாலை எப்படி அவசியமோ அப்படி மனத்தின் இருளை போக்கி சலனமற்ற மனம்,புத்தி உண்டாக நாம் ஆழ்ந்த சுய சோதனை,சுய பரீட்சை மேற்கொள்ள வேண்டும்.இவ்வாறு செய்து நம் சித்தம் சுத்தம் அடையும்போது, சுதர்மத்தை செய்யும் நமக்கு அது கர்ம யோகமாக ஆகிறது.

எனவே ஒருவன் ஆசை,பற்று,கோபம் இவற்றை விட்டொழிக்க வேண்டும்.கர்மம்,விகர்மம்,அகர்மம் என்ற இம்மூன்றும் இங்கு கர்மயோக சாதனைக்கு அவசியம்.கர்மம் என்பது சுதர்மத்தை குறிக்கும்.இது நாம் செய்யும் வெளிப்புற செயலை குறிக்கிறது. விகர்மம் என்பது நம் மனதை செய்யும் கர்மத்தில் முற்றிலும் அர்ப்பணிப்பது. நமக்கு உள்ளும் புறமும் உள்ள நமது சொரூபங்கள் தனக்குள் வேறுபாடு இன்றி ஒன்றி மனம் நினைப்பதை கையும்,கை செய்யப்போவதை மனமும் உணர்ந்து ஒருமித்த இயல்போடு குவிக்கப்பட்ட சிந்தையோடு முழு அர்ப்பணிப்போடு,சித்த சுத்தியோடு,பணிவுடன் நம் சுதர்மத்தை செய்வதுதான் இங்கு விகர்மம் எனப்படுகிறது.இங்கு ஆசையற்று,சுத்த பாவனையோடு கர்மம் செய்தல் என்பது அவசியம்.

சாந்தமான ஒத்துழையாமை என்பதில் சாந்தம் என்ற பண்பு ஒத்துழையாமை என்ற செயலைவிட மிகவும் முக்கியம். ஏனெனில் சாந்தமற்ற அராஜக ஒத்துழையாமை எவ்வளவு ஆபத்தானது என்பது நமக்கு தெரியும்.

அதுபோல **சலனமற்று சித்த சுத்தியோடு செய்யும் கர்மம்** என்பதில் கர்மம் என்பதைவிட " **சலனமற்று சித்த சுத்தியோடு" என்ற நிலைப்பாடு மிகவும் முக்கியம்**.இவ்வாறு கர்மமும் விகர்மமும் ஒன்றினையும் போது ஆசையற்ற நிலை என்பது மனதில் ஸ்திரப்படுகிறது. ஆசையை கடந்து கர்மங்களை செய்வது என்பது சுலபமாகிறது. விகர்மமானது பலவகையாக மனிதனின் இயல்புக்கு ஏற்றவாறு கீதையில் சொல்லப்படுகிறது.

பக்தியோகம் என்பது ஒரு விகர்ம கருவி. இதில் புலனடக்கம் வெளிப்புற செயலாகவும்,ஜபம் உட்புற செயலாகவும் அறிவுறுத்தப்படுகிறது. உண்ணாமல் விரதம் இருப்பதை நாம் அனுஷ்டித்தால் விரதத்தின் போது நம் மனம் இறைசிந்தையில் ஊறி இருக்க வேண்டும். அப்படியின்றி உணவைபற்றிய சிந்தையில் மனம் இருந்தால் விரதத்திற்கு அர்த்தம் இல்லை. விரதம் என்பது கர்மமாகவும், இவ்வேளையில் இறை சிந்தையில் நம் மனதை இருத்திக்கொள்வது விகர்மமாகவும் உள்ளது. வியாதியுற்ற ஒருவரை நாம்

கவனிக்கும் போது மனதில் கருணையோடு சேவை செய்தால் நமக்கும் இன்பம்,நோயாளிக்கும் நிம்மதி. இல்லையேல் இருவருக்கும் அது பாரமாக கடினமாக இருக்கும்,. வியாதிக்கு மருத்துவம் செய்வது இங்கு கர்மமாகவும்,உள்ளக்கனிவோடு அதை செய்வது விகர்மமாகவும் உள்ளது.

நாம் மூச்சுவிடுதலை சிரமப்பட்டு செய்வதில்லை. அதாகவே நடக்கிறது. இன்னும் பல உடலின் இயக்கங்கள் நான் செய்கிறேன் என்ற நமது தன்முனைப்பு, உணர்வு இன்றி நிகழ்கிறது. இதே போன்று நாம் செய்யும் கர்மங்களை சுலபமாக தன்முனைப்பு இன்றி சரியாக நேர்த்தியாக செய்ய நம்மை ஆயத்தப்படுத்தும் கருவிகளே இங்கு விகர்மம் எனலாம்.

சுதர்மத்தாலும், பக்தி, சரணாகதி, இறை சிந்தனை, புலனடக்கம், ஜபம், விரதம், ஜீவகாருன்யம், போன்ற விகர்ம கருவிகளாலும் நாம் செய்யும் கர்மங்கள் இலகுவாக, இயல்பாக, சுலபமாக ஆகிவிட கர்மங்களை செய்த சுவடே இன்றி எல்லா கர்மங்களையும் ஆற்றும் சக்தி மனதுக்கு வர இதுவே அகர்மம், அதாவது கர்மம் அற்ற நிலைக்கு நம்மை உயர்த்துகிறது.

எல்லா கர்மங்களை செய்தும் எதுவுமே செய்யாமல் இருக்கிறான் கர்மயோகி. எதுவும்

செய்யாமல் எல்லாவற்றையும் செய்கிறான் ஞானயோகி எங்கிறது கீதை. ஆத்ம சாதகனுக்கு கர்மயோகம் பொருத்தமானதாக அமைந்து அவனது ஆதாரங்களின் ஆரவாரங்களை அழித்து அமைதியும் உறுதிப்பாடும் அறிவிலும் மனதிலும் குடிகொண்டு சரணாகதியும், தன்முனைப்பற்ற நிலையும் உருவாக,நான் செய்கிறேன் என்ற உணர்வும்,எனக்கு இவை நடக்கிறது என்ற எண்ணப்பதிவுகளும் அற்றுபோக,கலங்கமற்ற அவனது மனதில் இறைவனின் அருள் வெளிப்படுகிறது.

-**தொடரும்**

# சுவாமி சிவானந்தரின் பஜன்

## (தமிழாக்கம்)



- கடவுள் உண்மையாம் கோவிந்தா!
- கடவுள் இன்பமாம் கோவிந்தா!
- கடவுள் அமைதியாம் கோவிந்தா!
- கடவுள் அறிவாம் கோவிந்தா!
- கடவுள் அன்பாம் கோவிந்தா!
- கடவுள் ஒளியாம் கோவிந்தா!
- மனதை செம்மையாக்கு கோவிந்தா!

- புலனை அடக்கு கோவிந்தா!
- உன்னை உணரு கோவிந்தா!
- இதுதான் உபதேசம் கோவிந்தா!
- எல்லா வேதங்களிலும் கோவிந்தா!
- எல்லா நூல்களிலும் கோவிந்தா!
- வாழ்வின் நோக்கம் கோவிந்தா!
- இறைஞானம் அடைவதே கோவிந்தா!
- மறந்து விடாதே கோவிந்தா!
- நிச்சயம் அடை கோவிந்தா!
- நம்பிக்கை பக்தி மூலம் கோவிந்தா!
- தியானம் மூலம் கோவிந்தா!
- கேட்டும் சிந்தித்தும் கோவிந்தா!
- தவம் யோகம்செய் கோவிந்தா!
- மந்திரங்கள் எழுது கோவிந்தா!
- “நான்” அற்ற தொண்டு செய் கோவிந்தா!
- அறிவு ஆராய்ச்சி வேணும் கோவிந்தா!
- அஹிம்சை கடைபிடி கோவிந்தா!

- உண்மை பேசு கோவிந்தா!
- கோபம் விடு கோவிந்தா!
- சகிப்பு வேணும் கோவிந்தா!
- பிரம்மசரியம் கோவிந்தா!
- அவசியம் கடைபிடி கோவிந்தா!
- மவுனமாய் இரு கோவிந்தா!
- சேவை அன்பு தர்மம் கோவிந்தா!
- கண்டிப்பாய் செய் கோவிந்தா!
- ஏழைக்கு பணிசெய் கோவிந்தா!
- பெற்றோருக்கு பணிசெய் கோவிந்தா!
- நோயாளிக்கு பணிசெய் கோவிந்தா!
- பணிவு தூய்மை கோவிந்தா!
- அவசியம் வேணும் கோவிந்தா!
- நல்லவனாகு கோவிந்தா!
- நல்லதை செய் கோவிந்தா!
- மகிழ்ச்சியாய் இரு கோவிந்தா!
- துணிவுடன் இரு கோவிந்தா!

- சகிப்பும் பொறுமையும் கோவிந்தா!
- அவசியம் வேணும் கோவிந்தா!
- மன்னிக்க கத்துக்க கோவிந்தா!
- பெருந்தன்மை வேணும் கோவிந்தா!
- எல்லாதுலயும் அளவாய் கோவிந்தா!
- இருக்க வேணும் கோவிந்தா!

-**தொடரும்**

***********
********
*****




*இதழ் முற்றும்*